**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 322 - தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹம்பந்தோட்டடை மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவின் பிரதான நுழைவாயில் அருகே 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 12 வியாபார நிலையங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 3,712,800 ஆன சூரியசக்தி மின்சார அமைப்பு நிதி அல்லா சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அனைத்து சொத்துக்களும் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் ரூபா 250,000,000 ஆன அடிப்படை வருமான மதிப்பீடு ரூபா 750,000,000 என திருத்தப்பட்டிருந்தமையினால், அடிப்படை வருமான மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு | 2023 ஆம் ஆண்டின் கட்டணங்கள் திருத்தப்பட்டமையின் காரணத்தினால் மற்றும் 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு வரையிலான வருமானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டமையினால் | மதிப்பீடுகள் முடியுமான வரையில் யதார்த்தமாக மற்றும் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையே 200 சதவீத வேறுபாடொன்று நிலவியது. | வேறுபாடு உருவாகியுள்ளது. | |
| (ஆ) | சீதாவக ஈரவலய தாவரவியல் பூங்காவின் தேயிலை தோட்டம் குத்தகை கொடுத்ததில் பெறப்பட வேண்டிய ரூபா 627,000 ஆன குத்தகை வருமானம், ரோயல் தாவரவியல் பூங்கா கெபடீரியா உணவகத்தின் குத்தகை வருமானம் மற்றும் அவ் உணவகத்திற்காக அறவிடப்பட வேண்டியந நீர் மற்றும் மின்சார பில்கள் ரூபா 2,794,664 ஆக கூட்டுத்தொகை ரூபா 3,421,664 ஆன நிலுவை வருமானம் ஆண்டின் இறுதி திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய மூலதன நிதியேற்பாட்டில் 34 சதவீதமான அதாவது 59,408,225 ஆன தொகை சேமிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் குறைநிரப்பு மதிப்பீடொன்றின் ஊடாக ரூபா 4,000,000 ஆன மேலதிக நிதியேற்பாடு திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மூலதன நிதியேற்பாடுகள் அனைத்தும் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமையினால் 02 வாகனங்களின் பழுதுபார்த்தலுக்காக நிதியேற்பாடு மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்டது. | திட்டத்துடன் செலவீனங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 07 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் அதாவது ரூபா 20,100,000 மீளாய்வாண்டு இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | பெறுகையின் போது ஏற்பட்ட தாமதம் மற்றும் காலநிலை காரணங்களின் அடிப்படையில் செயற்படுத்த முடியாது போனது. | நிதியேற்பாடு வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி 02 மாதங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது 17 சந்தர்ப்பங்களில் மீளாய்வாண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,374,068 ஆன செலவீனம் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் செவீனம் பின்னர் இனங்கண்டுக் கொள்ளல் மற்றும் நிதியேற்பாடு போதுமானதாக இன்மையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு<br>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூ. | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | **1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளை சட்டத்தின் 224 ஆம் உறுப்புரை** | - | 05 பூங்காங்களுக்குரிய 362.3744 ஹேக்கர் பரப்பளவினை கொண்ட காணியினை கையேற்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை | விவசாய திணைக்களத்திலிருந்து கையேற்கப்பட வேண்டிய இந்த காணி முறையாக கையளிக்கப்படவில்லை. | காணிகள் விரைவில் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை** | | | | |
| | XXIV அதிகாரத்தின் 4 மற்றும் 6.3 ஆம் பிரிவு | 4,343,939 | மீளாய்வாண்டின் இறுதி திகதி ஓய்வுப் பெற்றுச் சென்ற, மரணித்திருந்த மற்றும் கடமையை விட்டுச் சென்ற 35 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணத்தின் 571(3) பிரமாணம்** | 3,396,098 | காலம் கடந்த 55 வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | **1994 ஏப்ரல் 20 திகதிய 30/94 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி** | 10,519,45 7 | 03 ஆய்வு செயற்திட்டங்களுக்காக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த வெளிநாட்டு நிதி பொது திறைச்சேரியின் வெளிநாட்டு நிதியளிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்படாது நேரடியே திணைக்கள கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவில் மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பூங்காவிலுள்ள உள்ளூர் தாவரங்களின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு, பூங்காவின் தாவரவீடு பராமரிப்பு மற்றும் மேம்பாடு, பதவியணிக்கான பயிற்சி, பதவியணிக்கான விழிப்புணர்வு, பதவியணிக்காக பயிற்சித்திட்டங்கள் நடாத்துதல், பார்வையாளர்களை வழிநடத்துதல், பார்வையாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வெளியீடுகளை வெளிப்படுத்தல் போன்ற 08 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிராததுடன், பூங்கா நாற்று மேடைகளின் தாவரங்கள் லேபல் செய்தல், பூங்காவின் வெளிநாட்டு நாற்றுக்களை பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல், பூங்காவின் உள்ளூர் நாற்றுக்களை பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் வெளிநபர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துதல் போன்ற 04 செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் 0 தொடக்கம் 58 வரையான வீச்சில் காணப்பட்டது. | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, காலநிலை நிலைமைகள், நிதியேற்பாடு போதுமானதாக இன்மை காரணங்களினால் மட்டுப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மட்டும் செயற்படுத்தப்பட்டன. | செயல்நடவடிக்கை திட்டத்தின் செயன் முன்னேற்றத்தினை அடைவதற்கு வினைத்திறனாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2. வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அழிந்துச் செல்லும் இலங்கையின் உள்ளுர் தாவரங்களை பாதுகாப்பதற்காக தாவரவியல் பூங்கா பாதுகாப்புச் சர்வதேச நிறுவனத்தின் ஊடாக 2022 நவம்பர் 09 அம் திகதி ரூபா 1,776,688 ஆன தொகை திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,696,270 ஆன தொகை, அதாவது 95 சதவீதம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு 2024 ஆம் ஆண்டினுள் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதியேற்பாடுகள் வினைத்திறனாக மற்றும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிக்கட்டி கோவையின் 9.3.1 (இ) மற்றும் 8.9.1 (ஆ) உப பிரிவுகளுக்கு அமைவாக தொழிநுட்ப பிரிவின் அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்படாது மற்றும் ஒப்பந்தமொன்றிற்கு உடன்படாது ஹக்கல தாவரவியல்பூங்காவிற்கு நுழையும் மற்றும் பூங்காவிலிருந்து வெளிச்செல்லும் நுழைவாயில் அருகே 02 LED பலகங்கள் பொருத்துவதற்கு பெறுகை செய்யப்பட்டு ரூபா 6,481,080 ஆன தொகை வழங்குனரொருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு பொருத்தப்பட்ட 02 LED பலகங்கள் பொருத்தப்பட்ட திகதியிலிருந்து செயற்பாட்டு நிலையில் காணப்படவில்லை. | குறித்த நிறுவனத்துடன் தொடர்புக் கொண்டு எதிர்காலத்தில் முறைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் மேற்கொள்ளும் போது குறித்த சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பேராதெனிய ரோயல் தாவரவியல் பூங்காவில் களஞ்சியமொன்றில் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக கூட்டுத்தொகை ரூபா 7,916,374 ஆன 54 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விளைவற்று மற்றும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது. அதனுள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத ரூபா 3,572,815 ஆன 03 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டன. | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் 04 பூங்காக்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 23,610,780 ஆன 10 கொல்ப் வண்டிகள் 02 மாதங்கள் தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலமாக பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படாது அழிந்து செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் அவ் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு ஈட்டுவதற்கு முடியுமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொல்ப் வண்டிகள் விரைவாக பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மிரிஜ்ஜவில உலர்வலய தாவரவியல் பூங்காவில் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பெறுமதி இனங்காணப்படாத 09 வியாபார நிலையங்கள் 10 ஆண்டுகள் காலமாக விளைவற்று காணப்பட்டது. | 2024/ 2025 ஆம் ஆண்டிற்காக பிராந்திய விலைமனுக்கள் அழைக்கப்பட்டு குத்தகைக்கு கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கட்டிடங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | மிரிஜ்ஜவில உலர்வலய தாவரவியல் பூங்கா வின் 10 பேட்டரி கார்களுக்கு 05 ஓட்டுநர்கள் மட்டும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தினால் எப்போதும் 05 பேட்டரி கார்கள் விளைவற்று காணப்பட்டது. | பார்வையாளர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் வழங்குவதற்காக வெவ்வேறு அளவிலான பேட்டரி கார்கள் காணப்படுவதுடன் மற்றும் 02 பேட்டரி கார்கள் ஹக்கல தாவரவியல் பூங்காவிற்கு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | விளைவற்ற பேட்டரி கார்கள் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சீதாவாக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான 0.5015 ஹேக்கரிலான காணி மற்றும் ஹக்கல தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான 49.564 ஹேக்கரிலான காணிகள் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், இந்த காணிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்து தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணிகள் தீர்க்கப்பட்டு விரைவாக உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 நிதி மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹக்கல தாவரவியல் பூங்காவின் சுற்றுலா விடுதியின் 04 அறைகளில் கும்புக் பலகைகள் அமைப்பதற்காக Provisional sum ஆக மதிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 900,000 ஆன தாகையினுள் பெறுமதி ரூபா 145,125 ஆன தொகை பிறழாக காண்பிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 12 ஆந் திகதி மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதி பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பேராதெனிய ரோயல் தாவரவியல் பூங்காவில் ரூபா 3,344,731 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் கல்லிப் பிரிவிற்குரிய ஒப்பந்தத்தின் கொடுப்பனவு விலைப்பட்டியல் பிரகாரம் விளையாட்டு பிரதேசத்தில் 1:3 என்ற விகிதத்தில் வரப்பு மெழுகுதல் மற்றும் பிணைப்பூட்டு கற்கள் பதித்தல் ஆன 02 செலவின விடயங்களுக்கு உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டிராத போது, நிறைவேற்றப்பட்ட வண்ணம் பரிந்துரை செய்யப்பட்டு ரூபா 174,627 கொடுப்பனவு செய்ப்பட்டிருந்தது. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பேராதெனிய ரோயல் தாவரவியல் பூங்காவின் நீர் தேவைக்காக பெரோ சீமேந்து தாங்கியொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா 5,609,030 இற்கு 2021 ஆகஸ்ட் 19 ஆந் திகதி உடன்பட்டடு ஒப்பநத நிறுவனத்திற்கு நிர்மாணிப்பு கையளிக்கப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 15 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி ஒப்பந்தம் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராது மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 05 சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை ரூபா 5,855,645 ஆன தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவு விலைப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள 27 மற்றும் 29 தொடக்கம் 41 வரை வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிராத போது நிறைவேற்றப்பட்ட வண்ணம் விலைப்பட்டியல்கள் பிறழாக தயாரிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு அதற்காக ரூபா 2,145,422 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு மட்டும் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

**3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 104(4) பிரகாரம் மீளாய்வாண்டினுள் திணைக்களத்தில் நேர்ந்த நட்டங்கள் மற்றும் சேதங்களுக்குரிய 05 நிகழ்வுகள் தொடர்பாக முழுமையான பரிசோதனையொன்று மேற்கொண்டு நட்டங்கள் மற்றும் பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்கள் இனங்காணப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிக்கவில்லை. | நிதி பிரமாணம் 104(4) பிரகாரம் பரிசோதனை விரைவாக நிறைவு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி பிரமாணம் பிரகாரம் பரிசோதனை உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹக்கல தாவரவியல் பூங்காவின் 2021 திசெம்பர் ரூபா 904,909 ஆன செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்க மதில் முறையான திட்டமொன்று மற்றும் போதுமான மேற்பார்வை இன்றி நிர்மாணித்தமையின் காரணத்தினால் 2023 ஏப்ரல் மாதம் சரிந்து போயிருந்தது. | இயற்கை சற்றத்தினால் நேர்ந்தது. | சேதம் தொடர்பாக நிதி பிரமாணம் 104(3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேவை தொடர்பாக முறையான மதிப்பீடின்றி ரோயல் தாவரவியல் பூங்காவின் 200 ஆம் ஆண்டு கொண்டாடத்திற்காக கடந்த ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,096,360 ஆன 4000 நினைவுப் பலகைகள் மற்றும் ரூபா 3,081,000 இற்கு "200 ஆண்டு கொண்டாட்டம்" பெயரிலான 1000 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் ரூபா 3,534,930 பெறுமதியான 930 புத்தகங்கள் மற்றும் 2,537,474 பெறுமதியிலான 3273 நினைவுப் பலகைகள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக விற்பனை செய்யப்படாது காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய மோசமான நிலைமையின் காரணத்தினால் 200 ஆம் ஆண்டு கொண்டாட்டம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நடத்துவதற்கு முடியாது போனமையினால் இந்த பொருட்கள் விளைவற்று காணப்பட்டது. | தேவை தொடர்பாக சரியான மதிப்பீட்டின் பின்னர் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 1471-2006 ஆம் இலக்க சாதாரண வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக விவசாய திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட தாவரவியல் பூங்காக்கள் புதிய திணைக்களமொன்றாக வெளியிடப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், தாவரவியல் பூங்கா திணைக்கள சுற்றாடலினுள் தாபிக்கப்பட்டுள்ள விவசாயத் திணைக்களத்தின் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் விவசாய வெளியீடுகள் பிரிவு தாவரவியல் பூங்காவிற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கையேற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணி அளக்கப்பட்டு உரித்தினை விரைவில் கையேற்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரோயல் தாவரவியல் பூங்காவின் கெபடேரியா உணவகம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த தனியார் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,027,165 ஆன நிலுவை குத்தகை கட்டணம் அறவிடப்படாது அந் நிறுவனத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்காகவும் மாதாந்தம் ரூபா 287,000 ஆன தொகைக்கு மீண்டும் உணவகத்தினை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். அலுவலக செயற்பாடுகளின் போது ஏற்பட்ட குறைப்பாடுகளின் காரணத்தினால் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு முடியாது போனது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கொவிட் தொற்று நிலவிய காலத்தினுள், அதாவது 2020 ஏப்ரல் தொடக்கம் 18 மாதங்கள் கெபடீரியா பயன்படுத்தப்பட்டமையினால் நீர் மற்றும் மின்சாரம் முறையே ரூபா 130,608 மற்றும் 744,410 கொடுப்பனவு மேற்கொள்ளப்படவிருந்த போது, அக் காலத்தில் உணவகத்தின் மாதாந்த குத்தகை கட்டணம் ரூபா 9,023,652 ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்படாதிருப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | அரச வருமானம் பதிவழிக்கப்படும் போது சரியான முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 இன் செயலாற்றல் அறிக்கை பிரகாரம் 04 நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய (SDG) 04 குறிக்காட்டிகளின் செயன்முன்னேற்றம் 50 தொடக்கம் 66 சதவீத வீச்சில் காணப்பட்டது. | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, பயிற்சி பாடநெறிகளுக்கான கேள்விகள் குறைதல் மற்றும் உற்பத்தி கிரயம் உயர்வடைதல் காரணத்தினால் இலக்குகள் நிறைவேற்றுவதற்கு இல்லாது போனது. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்கு வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 906 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாரான பதவியணி 750 ஆகும். அதனுள் 11 சிரேஷ்ட மட்டத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக வெற்றிடங்கள் 166 காணப்பட்டதுடன், மேலதிக உத்தியோகத்தர்கள் 10 காணப்பட்டனர். | சிரேஷ்ட மட்டத்தின் 05 பதவிகளுக்காக இணைக்கப்பட்டுள்ளது மற்றும் ஏனைய இணைத்தலுக்காக கோரப்பட்டுள்ளது. | தேவை இனங்கண்டு வெற்றிடங்கள் விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |